Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

மாநகராட்சி மன்று 24-1-1994 யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 11 (24-01-1994) திங்கட்கிழமை ஓசை 340

## 2-வது ஆண்டில் காலடிவைக்கும் தாயகம் சிறுவர் இல்லம்

வவுனியா கோட்டத்தில் அமைந்துள்ள தாயகம் சிறுவர் இல்லச் சிறுவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும்வகையில் வவுனியா, கிளிநொச்சி ஆகிய கோட்டங்களில் பல கலை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர். ஆரம்பத்தில் 12 சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த சிறுவர் இல்லம், 75 சிறுவர்களையும், பல நவீன வசதிகளையும் கொண்டு, இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வன்னி மாவட்ட போராளிகள், குடும்பநலன் காப்பக துணைப் பொறுப்பாளர் திரு. செல்வம் மாமா தலைமையில் இச்சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஆரம்ப (4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் தலைவராக பிரபாகரனை ஏற்கவேண்டும்!

## ஆதரவு வழங்க தொண்டமான் சிறிமாவிற்கு நிபந்தனை விதிப்பு

இலங்கைத் தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக திரு. வே. பிரபாகரனை ஏற்றுக்கொள்ள வேண்டும் அப்பொழுதே எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு அளிக்கமுடியும் என அமைச்சர் தொண்டமான் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் தெரிவித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தமிழ்மக்களின்அங்கீகரிக்கப்பட்ட தலைவராக திரு. வே. பிரபாகரன் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென திரு. தொண்டமான் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவை கேட்டுள்ளார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தனது இந்தநிபந்தனையை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரத்தில் இருக்க உதவ முடியும் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தலைவர் தொண்டமான் கேட்டுள்ளாராம்.

பாணந்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே நெவில் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## ஐ. தே. கவின் ஊழலை விசாரிக்க மக்கள்விசாரணைக்குழு அமைப்போம்

### -சிறிமாவோ உறுதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக கட்சி ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பன தொடர்பாக விசாரணை செய்ய மக்கள் விசாரணைக்குழுஒன்றை நியமிக்கப்போவதாக எதிர்க் ... போட்டியிடக்கூடாது என்பதற்காக எனது வாக்குரிமையை பறித்தார். இன்று அவர் அரசியலில் இருந்தே பயந்து ஒதுங்கி விட்டார். என்னை அரசியலில் இருந்து ஒதுக்கி விட முடியாது என்பதே உண்மை. இவ்வாறு ... பாக எமக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை. சி. ஐ. டி. விசாரணையிலும் நம்பிக்கையில்லை சி. ஐ. டி. விசாரணை அறிக்கை திரிவு

## மின்சார உபகரணங்களை கொள்ளையடித்த விமானப்படையினர் கைது

(கொழும்பு)

இரத்மலானைப் பகுதியிலுள்ள பௌத்த நிலையம் ஒன்றிலிருந்து இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள மின்சார உபகரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக இரத்மலானை விமானப்படை முகாமில் பணிபுரியும் இருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களையும் பொலிசார் மீட்டுள்ளனர். பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை பொலிசார் தேடி வருகின்றனர். மேலதிக விசாரணை நடைபெற்றுவருகிறது.

## ஊர்காவல் படையின் மோட்டார் சைக்கிள் பறிப்பு

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்தில் குச்சவெளிப் பகுதியில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிளை இனந்தெரியாத சிலர் பறித்துச் சென்றுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றது.

## யாழ். குடாநாட்டில் கடந்த காலத்தில் ராணுவ நடவடிக்கையால் 2,25000 பேர் இடம்பெயர்வு

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் சுமார் இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் பேர் தங்கியுள்ளனர் என புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் முகாம்களிலும் ஏனையோர் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். இவர்களிற்கு உணவு வழங்க சுமார் ஐந்து கோடி ரூபாவிற்குமேல் செலவு செய்யப்படுவதாக அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

## 4500 பரல் மண்ணெய் 'மார்கோ'வில் இன்றுவரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான 4500 பரல் மண்ணெண்ணையை ஏற்றிக்கொண்டு கொழும்பில் இருந்து புறப்பட்ட மார்கோ கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

... கோணமலையில் இருந்து 2000 மெற்றிக் தொன் மா, 500 மெற்றிக் தொன் அரிசி, 200 மெற்றிக் தொன் சீனி, பருப்பு, பயறு, சோயா என்பவற்றை ஏற்றிக்கொண்டிருக்கின்றது எனவும், இவை ஏற்றிமுடிந்ததும் அக்கப்பலும் பருத்தித்துறை நோக்கி மிக

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் மேற்படி பகுதிகளின் வயல் வெளிப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரியவருகிறது. (41)

## புத்தளம் மீனவருக்கு புலிகளால் அச்சுறுத்தல்

### ரிச்சார்ட் பத்திரன கூறுகிறார்

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் சிங்கள மீனவர்கள் புலிகளால் தாக்கப்படுவதால் இம் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பை அரசு வழங்க வேண்டும் என சுதந்திரக்கட்சி எம்.பி. ரிச்சார்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

முன்னரைப் போன்று வடக்கு - கிழக்கு கடல்பிரதேசத்தில் தென்பகுதி மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் நிலை இன்றில்லை. மட்டக்களப்புக்குச் சென்று கூட இன்று மீன் பிடிக்க முடியவில்லை. புத்தளம் கடற்பிரதேசத்தில் மீனவர்கள் புலிகளால் தாக்கப்படுகின்றனர். எனவே அரசாங்கம் மீனவர்களுக்கு தகுந்த பாதுகாப்பினை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இம்மீனவர்கள் ஒளிமற்றும் டயனமைட் மூலமாக மீன் பிடிப்பதை தடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## தென் மாகாண சபை தேர்தல்

யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை மேக்ஸ் கோமாரி என்ற கப்பல் திருத்தப்பட்டு ஏற்றிமுடிந்ததும் அக்கப்பலும் பருத்தித்துறை நோக்கி மிக விரைவில் புறப்படும் எனவும் தெரியவருகின்றது.

## கசிப்பு வைத்திருந்தவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம்

(வடமராட்சி)

அல்வாய் வடக்கு பழைய வேதக் கோயிலடியில் சட்டவிரோதமாக மூன்று போத்தல் கசிப்பு வைத்திருந்தவரை பருத்தித்துறை காவல் துறையினர் கையும் மெய்யுமாக கைது செய்துள்ளனர்.

மாணிக்கம்- ரகுநாதன் என்பவர் மூன்று போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்காகவும்இரண்டரைப் போத்தல் கள்ளும் வைத்திருந்தமைக்காகவும் காவல் துறையினர் இவரை நீதிமன்றம் முன் ஆஜர் செய்தனர்.

நீதிமன்ற நீதியாளர்கள் கசிப்புவைத்திருந்தமைக்காக 10 ஆயிரம் ரூபாவும், கள்ளு வைத்திருந்தமைக்காக 500 ரூபாவும் குற்றப்பணம் அறவிட்டுள்ளனர். (யோ)

## கண்டி பாத்ததும்பரவில் ஐந்து தமிழர் மர்மமறைவு

(கண்டி).

கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பர தேர்தல் தொகுதியில் பன்வில பகுதியில் ஐந்து தமிழர் உட்பட 19 பேர் காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் தொடர்பாக இன்று வரை எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையென இவர்களின் உறவினர் கவலை தெரிவித்துள்ளனர்.

சென்ற வருடம் இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிய வந்த போதும் அதன் பின்னர் இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இவர்களின் உறவினரால் கண்டுபிடிக்கப் படாமல் மர்மமாகவே இருப்பதாக மேலும் தெரியவருகின்றது.

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியருக்கு ஊதியமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய உப்புக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சென்ற வருடம் முழுவதும் ஊதியம் எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இக்கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் சில நூற்றுக்கணக்கான ஊழியர்களும், இவர்களைத் தங்கிவாழ்வோரும் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களுக்கு இக்காலப்பகுதியில் எந்தவொரு நிவாரணமும் கிடைக்காமையினால் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் இவர்கள் பல வேதனைகளை அனுபவித்துவருகின்றனர்.

தமது ஊதியத்தைப்பெற்று தருவதில் அதிகாரிகள் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிப்பதாக பல ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கள் விசாரணைக்குழுஒன்றை நியமிக்கப் போவதாக எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அன்று ஜே ஆர்.ஜெயவர்த்தனா அவருக்கு எதிராக நான் ஜனாதிபதி தேர்தலில் ஒதுக்கிவிட முடியாது என்பதே உண்மை. இவ்வாறு சென்றவாரம் மத்துகமவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் நியமிக்கும் கமிஷன் தொடர்பில்லை சி.ஐ.டி. விசாரணை அறிக்கை திரிவுபடுத்தப்பட்டே வெளியிடப்படுகின்றது. மக்கள் தான் மிகவும் தெளிவாக இருந்து செயலாற்றவேண்டும் என மேலும் அவர் கூறினார்.

# எமது தலைவர் லலித்தை கொன்றவருடன் சேரமாட்டோம்

### சிறில் அநுர ஹென்றி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகப் போட்டியிடுவது என்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முடிவில் மாற்றம் எதுவும் இல்லை. காமினி, பிரேமச்சந்திரா ஐ.தே.க வில் இணையலாமே தவிர ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணையாது என அக் கட்சியின் முக்கியஸ்தர் சிறில் அநுர ஹென்றி உறுதிபடக் கூறினார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எக்கட்டத்திலும் தனது கொள்கையிலிருந்து பின்வாங்காது ஐ. தே. க. விற்கு எதிராகச் செயற்படுவதன் மூலமே ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியும் என கூறியவர்கள் இன்று சுய நலத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையலாம்.

ஆனால் எமது கட்சித்தலைவர் லலித்தைக் கொன்ற ஐக்கிய தேசியக் கட்சியினருடன் எந்தக் கட்டத்திலும் இணையமாட்டோம் என மேலும் அவர் தெரிவித்தார்.

# திறந்த பல்கலைக்கழகத்தை இயங்க வைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் இயங்கிகாதிருந்த திறந்த பல்கலைக் கழகத்தை மீளவும் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. திறந்த பல்கலைக்கழகப் பணிப்பாளர் பதவிக்கு ஒருவரின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அப்பதவிக்கான நியமனம் வழங்கப் படவிருந்த போதிலும் அவர் நியமனத்தில் அக்கறைகாட்டவில்லையாம். இப்போது வேறொருவரை நியமிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இதேவேளை இந்தப்பல்கலைக்கழகத்துக்கான காகிதாதிகளையும், சில ஆவணங்களையும் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ துரைராசா யாழ்ப்பாணம் எடுத்து வந்துள்ளார். பல சிரமங்கள் மத்தியிலும் இவர் காகிதாதிகளை கிளாலி வழியாக யாழ்ப்பாணம் கொண்டு வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

## வாகன துஷ்பிரயோகம்; உயர்மட்ட விசாரணை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமைச்சு ஒன்றுக்குச் சொந்தமான 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடம்பர வாகனமொன்றைமலையகத்தின் முக்கியஸ்தர் ஒருவரின் உறவினர் உபயோகித்தது தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மத்தியமாகாணசபை பிரச்சினை உருவானதன் பின்னர் இவ்வாகனம் உபயோகிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது பிரஸ்தாப

(4ஆம் பக்கம் பார்க்க)

தென் மாகாண சபை தேர்தல்

## எதிரணியின் பட்டியலில் ஐ.ஐ.தே.மு வேட்பாளர்

தென் மாகாண சபை தேர்தலின் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் வேலையை பொதுஜன ஐக்கிய முன்னணியினர் நேற்று நிறைவு செய்துள்ளனர்.

எதிர்க்கட்சித்தலைவிசிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அவரின் அலுவலகத்தில் மேற்படி வேட்பாளர் பட்டியல் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டதாகவும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்துபோட்டியிடுவதெனஉறுதி செய்யப்பட்டதுடன் அவர்களின் வேட்பாளர் சிலரும் அப்பட்டியலில் உள்ளடங்கி இருப்பதாகவும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சி இயங்கும் என மேலும் அவர்கள் கூறுகின்றனர்.

## சர்வாதிகார ஐ.தே.க வுடன் இணையப் போவதில்லை

### ஐ. ஐ. தே. மு. உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

''ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளப் போவதாக காமினி திசாநாயக்காவோ அல்லது ஜி. எம். பிரேமச்சந்திராவோ உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை'' என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய உறுப்பினர் ஏ. சீ. குணரட்ன பி.பி.ஸி யின் சிங்கள சேவையாகிய ''சந்தேசிய'' விற்குத் தெரிவித்தார்.

''ஐக்கிய தேசியக் கட்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலை தவணை

## ஆரம்பத்தின் போதே அதிபர்களை மாற்றமுடியும்

(நல்லூர்)

அதிபரொருவர் பாடசாலைத் தவணையின் ஆரம்பத்தில் மாத்திரமே இடமாற்றம் செய்யப்படவேண்டும். மகாவித்தியாலயங்களிலும், மத்திய மகாவித்தியாலயங்களிலும் கடமையாற்றும் அதிபர்களை இடமாற்றம் செய்யும் போது கல்விச்சேவைச் சபையின் இணக்கத்தைப் பெறவேண்டும். இவ்வாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்ட கல்வி அலுவலகங்களுக்கு அறிவிக்க வேண்டியது உரிய அதிபர்களின் கடமையாகும். இது தொடர்பான

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி, உடன் வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக), ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7268)

### கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன் (HY - LINE) பிறவுண் வெள்ளைபேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. கோழிக் குஞ்சுகள் ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். மொத்தமாக எடுப்பவர்களுக்கு விலை 50/- ரூபா மட்டுமே. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7291)

### ஸ்ரீலங்கா அச்சகம்

மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் ராஜா தியேட்டர் அருகாமை — ஸ்ரீ காந்தா அச்சக லேனிலேயே நடைபெறுகின்றது. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. (7307)

### விற்பனையாகிறது

உளவியலும் நவீன கற்பித்தலியலும் கலை இலக்கிய கோட்பாடுகள் கலாநிதி சபா. ஜெயராசா. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-8407)

### கல்வி

யாழ்ப்பாணத்தில் தனித்தனியாக விலங்கியல் கற்பிக்கப்படும். 94,95ம் ஆண்டிற்கு மட்டும் விண்ணப்பிக்கவும். 309 மே/பா. ஈழநாதம், 31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (7314)

### பாராட்டு

புங்குடுதீவு கொத்தணி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. க. பேரம்பலம், புங்/இராஜராஜேஸ்வரி வித்தியாலய அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. செ. தனபாலசிங்கம் ஆகியோருக்கு மேற்படி கொத்தணி பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் நடாத்தும் 'சேவை நலம் பாராட்டு விழா' 26-ம் திகதி புதன் கிழமை யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் நடைபெறும்.

## தரமான மரக்கறி விற்பனைக்கு வந்துள்ளது

யாழ் மாவட்டத்திலே சிரட்டைக் கரிக்கு நிலவுகின்ற தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனை கைத்தொழில் பகுதியினர் தரமானமரக்கரிவிற்பனையை ஆரம்பித்துள்ளனர்.

மரக்கரி தேவைப்படுவோர் யாழ்ப்பாணத்திலே அமைந்துள்ள யுனிரெக் நிறுவனத்துடன் (பழைய வெலிங்டன் தியேட்டர்) தொடர்பு கொண்டு தமக்குத் தேவையான மரக்கரியினை பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கோரியுள்ளது.

### கண்டெடுப்பு

பூநகரி நல்லூர்ப்பகுதியில் கண்டு எடுக்கப்பட்ட பின்வருவோரின் அடையாள அட்டைகள் எமதுஅலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்:

திருமதி சிந்தாமணி இராசையா, வட்டுக்கோட்டை கிழக்கு. சின்னத்தம்பி தியாகராசா கொக்குவில். சண்முகராசாஜெகதீஸ்வரி மீசாலை தங்கராசா சிவலெட்சுமி நல்லூர், அம்பிகையம்மா தியாகராசா கொக்குவில் துரைசிங்கம் இராசக்கோன் சங்கரத்தை, தங்கராசா பகீரதிரஜனி மானிப்பாய். அத்துடன் சிற்றம்பலம் சிவக்கொழுந்துவின் வர்த்தக வங்கியின் கணக்குப் புத்தகம்.

### வரகிலிருந்து பாண் தற்போது அறிமுகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியினரின் முயற்சியால் வரகு தானியத்திலிருந்துதயாரிக்கும் பாண் இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உரும்பராய் மதுரம் பேக்கரியினரால் தயாரிக்கப்படும் இப் பாண் இப்போது விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

### வணிகஜோதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் ஜனகரத்தினம்மத்திய மகா வித்தியாலய வணிக ஜோதி 16 வது மலர் வெளியீட்டு விழா வரும் 16ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்வன் அ. அலஸ்ரீன் குமார் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டுவிழாவிற்கு பிரதம அதிதியாக

### தளபாடங்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில் இயங்கும் 'சாம்சன்' பாலர் பாடசாலையில் தளபாடப் பற்றாக்குறை இன்னமும் நீங்கியதாக இல்லை என தெரிவிக்கப்படுகிறது. இங்கு பயிலும் சுமார் ஐம்பது சிறார்களும் 'றபர்சீற்' போட்டு நிலத்தில் இருக்க, கற்பிக்கும் மூன்று ஆசிரியைகளும் நின்ற நிலையிலேயே போதனையில் ஈடுபடுவதாகவும் தெரியவருகிறது. தீவக கோட்ட அரசியல் துறையினால் ஒரு மேசை, மூன்று சிறிய வாங்குகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரஸ்தாப ஆசிரியைகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (22)

### வீதிவிளக்கு பொருத்துதல் தீவிரம்

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையைச் சேர்ந்த பிரதான வீதிகளில் வீதி விளக்கு அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்படி வீதிவிளக்கு அமைக்கும் பணியினை தொடர பிரதேசசபையினர் அனுமதி அளித்ததையடுத்து பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் மேற்படி வீதிவிளக்குகள் அமைக்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது ஆனைக்கோட்டை புற்கை தின்னி பிள்ளையார் கோவிலடியிலும், மானிப்பாய் அந்தோனியார் கோவில் முன்பாகவும், சாயி சமித்தி முன்பாகவும், மருதடிப்பிள்ளையார் கோவில் முன்பாகவும் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ் வீதி விளக்குகளை சேவை அடிப்படையில் அமைக்க முன் வந்த பொது ஸ்தாபனங்களை வெகுவாக மக்கள்பாராட்டியுள்ளனர். (41)

### விளையாட்டுப் போட்டியும் அன்பளிப்பும்

கைதடி சைவச்சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கிடையே

## வைத்தியர் தேவை

யாழ்நகரின் மத்தியில் இயங்க இருக்கும் வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு (CLINIC) குழந்தை வைத்தியத்தில் அனுபவம் மிக்க வைத்தியர் (M. B. B S.) முழு நேரமாகவோ பகுதிநேரமாகவோ கடமையாற்றத் தேவை. ஓய்வுபெற்றோர், இடம்பெயர்ந்தோர் விரும்பத்தக்கது. 31-01-1994க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 308
மே/பா ஈழநாதம்,
31. மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8432)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
1932.10.16

மறைவு
1993.12.28

அமரர்


### வேலுப்பிள்ளை ஞானரத்தினம்

(முன்னாள் உதவி பொலிஸ் அதிபரும், இளைப்பாறிய நில அளவையாளரும், மதிப்பீட்டாளரும், உத்தரவுபெற்ற நீதிமன்ற ஆணையாளருமாவார்)

ஞானரத்தின மண்டபத்தின் ஞாயிற்றி
னொளியேநீ!
ஞாலத்தி லணைந்து மண்ணில் சாய்ந்தன்றே
உற்ற துணையு முடன்பிறப்பு முனதுமக்கள்,
மண்ணில் விண்ணிடிந்து மறைந்த கதையதுவாய்
கண்ணில் மணியிழந்தோம் கருத்தினில்
விருப்பிழந்தோம்
சொல்லிலோர் தடுமாற்றம் சுகமிழந்தாரின்
கதையதுவாய்
விண்ணில்நீ யேகியேற்ற பொற்பாதமல
ரடியினைத்தினம்
சென்னியில் வைத்தேற்றிச் சேவித்தலன்றி
யிப்புவியல்
மண்ணில் செய்யும்பிறப் பேழுமுன் பணிக்கென்
றெண்ணித் துணிந்தேற் றுதலேயெம் பணியாம்.

1994-1-24ஆந் திகதி திங்கட்கிழமை இன்று நடை

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு:
7-02-1938

உதிர்வு:
25-12-1993

அமரர்

### சின்னத்தம்பி செல்லத்துரை

கொழும்பில் 25-12-93 அன்று இறைபதம் அடைந்த எமது தந்தை சின்னத்தம்பி செல்லத்துரை அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

41/73 செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.


திருமதி பா. இராசேஸ்வரன்
(மகள் பேபி)
குடும்பத்தினர்.

(7309)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
1923-09-23

இறப்பு
1993-12-25



### சவரிமுத்து மரியாம்பிள்ளை

'அன்பின் இறைவா மரணம் வாழ்வின் முடிவல்ல-நித்திய வாழ்வின் ஆரம்பமே' என்று நீர் கூறிய வார்த்தையை விசுவசிக்கின்றோம்.

எமது அன்புத்தந்தையின் பிரிவால் வேதனையுறும்;
மனைவி:- மரியாம்பிள்ளை மரியநாயகி
பிள்ளைகள்:- அல்போன்ஸ் குடும்பத்தினர், மரியடேவிற் (நோர்வே), இருதயசீலன் (இத்தாலி) எலாறீஸ்-றூபி (இத்தாலி), அன்ரன் இன்பம் (நாகர் கோவில்) பெலஸ்ரீன் றோஸ் (கனடா), காலம்சென்ற மரியகொலஸ்ரிக்கா, அன்ரன் யோகதாஸ் (நோர்வே), றஞ்சன்

## நெல்வயல்கள்பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் பெய்த பெரும் மழையை அடுத்து பெருமளவு நெல்வயல்கள் வெள்ளத்தால் அழிந்து போயுள்ளன. அடம்பன், நானாட்டான் போன்ற பகுதிகளின் நெல்வயல்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

## நிதிஉதவி

(தொல்புரம்)

மாகியப்பிட்டிக் கிராம அலுவலர் பிரிவில் பன்னத் தொழில் மேற்கொள்ளும் பொருட்டு வறிய குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 'ஜனசவிய' திட்டத்தின் கீழ் வசதியற்ற சுமார் 37 குடும்பங்களுக்கு குடும்பஅங்கத்தவர்தொகைக்கேற்ப இந்நிதியுதவி வழங்கப்பட்டதாக தெரியவருகிறது. (41)

## வெளிச்ச வசதி

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியிருக்கும் யாழ்-புகையிரத நிலைய முகாமில் உள்ள மாணவ மாணவிகள் இரவில் பாடம் படிப்பதற்கு, பெற்றோமாக்ஸ்' வெளிச்ச வசதிஅளிக்கப் பட்டுள்ளது. முகாமில் அமைந்துள்ள வலிதாபாலர் பாடசாலையில் தினமும் மாலை ஆறுமணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரை சுமார் 55மாணவர்கள் இவ்வாறு கல்வி கற்று வருகின்றனர். இதில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு பதினொன்றுவரையுமான மாணவர்கள் அடங்குவர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் நடைபெற்று வரும் இக் கல்வி கற்றல் நடைமுறை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவகப் பிரிவினால் மேற்பார்வை செய்யப் படுவது குறிப்பிடத்தக்கது. (22)

விற்கு பிரதம அதிதியாக திரு. சி. புலேந்திரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்) அவர்களும் விசேட அதிதியாக தமிழீழ கல்விமேம்பாட்டுப் பேரவை துணைப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமாரன் அவர்களும் கலந்து கொள்கின்றனர். நூலின் முதல் பிரதியை திரு. செ. பத்மநாதன் (திட்டப் பணிப்பாளர் யாழ்ப்பாணம்) அவர்கள் பெறவுள்ளார். அறிமுக உரையை திரு. க. தேவராஜா (சிரேஷ்ட விரிவிரையாளர் வணிக முகாமையியற் துறை யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் நடாத்தவுள்ளார்.

யான விளையாட்டுப்போட்டியொன்றை யாழ் வட்டலியோ கழகம் அண்மையில் நடத்தியது வெற்றியீட்டிய சிறுவர்சிறுமியருக்குபரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மேலும் 11,000 ரூபா பெறுமதியான தைக்கப்பட்ட ஆடைகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் மதிய போசனம் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன. லியோ ம. மகிதரன் தலைமையில்நடைபெற்றஇவ் வைபவத்திற்கு மாவட்ட லியோ கழகங்களின் தலைவர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.


ஓம்

ஜெய்பிரேமசாந்தி!

பூபாலகிருஷ்ண ஆச்சிரமம்

சுன்னாகம்

### ஆரம்ப நாள் விழா

### 26-01-1994

மேற்படி ஆச்சிரமம் முன்பு இயங்கிவந்த கே. கே எஸ். வீதி. சுன்னாகம் இல்லத்தில் எதிர்வரும் புதன் கிழமை காலை 8 மணிக்கு வரும் சுபவேளையில் திரும்பவும் ஆரம்பிக்க அருள் மிகு சுவாமி பிரேமானந்த மகரிஷி அவர்களின் திருவருள் கூடியுள்ளது,

விழா ஆரம்பித்தல் :- திரு நா. கந்தசாமி (அதிபர், யூனியன் கல்லூரி)

திறந்து வைத்தல் :- திரு ஆ. மகாலிங்கம்(வலி-தெற்கு பிரதேச செயலாளர்)

சுவாமி பிரேமானந்தா அவர்களின் திருஉருவப்படம்

திரைநீக்கம்.- திரு வே. பொ. பாலசிங்கம் (யாழ் மாநகர ஆணையாளர்)

தொடர்ந்து பஜனை, அருள் உரைகள் நடைபெறும்.

ஜெய்பிரேமசாந்தி!

திருமதி நடராசா பாக்கியலட்சுமி

(சி-8446) ஆச்சிரம ஒருங்கிணைப்பாளர்



1994-1-24ஆந் திகதி திங்கட்கிழமை இன்று நடைபெறவுள்ள சபிண்டீகரண நிகழ்ச்சியிலும் 1994 01.26 ஆந் திகதி நாளை மறுதினம்புதன்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்தியங்களிலும், மதிய போசன விருந்துபசாரத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''சிவஞான பவனம்'' மனைவி, பிள்ளைகள்,
23, புனித அந்தோனியார்வீதி, உறவினர்.
சுன்னாகம். (7306)



## நீக்கமற நிறைந்த மூன்றாண்டு
## நீங்கா நினைவலைகள்



பரலோக ராஜ்ஜியத்துள் புகுந்த நாள்

**24 - 01 - 1991**

திருப்பலி :- யாழ் புனித மரியன்னை பேராலயம் காலை 6.15 மணி

### லீனா பரஞ்சோதி
### (தாதிய உத்தியோகத்தர்)

அம்மா- கனவில் வருகின்றாய். கையசைத்து மகிழ்கின்றாய்-புன்னகைத்து நான் நிற்க பூவுலகைத்துறந்த தேனோ? விண்ணகத்தில் நின்று நீயும் விண்ணரசின் தேவனை -வேண்டி எனைக்காத்திட வேண்டுகிறேன்

— உன்னை —

48, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏக்க கனவுகளுடன்
மகள் - கணவன்

(7289)



ரிக்கா, அன்ரன் யோகதாஸ் (நோர்வே), [illegible]
(நோர்வே), ஜின் வினோஜினி, மைத்துனர், மைத்துனிமார் மற்றும் உற்றார் உறவினர்.

தகவல்:
மரியாம்பிள்ளை
அல்போன்ஸ்

நாகர்கோவில். (7264)



## நினைவு கூருகின்றோம்...
## 1994-01-24

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் திருகோணமலையில் (கும்புறுப்பிட்டி) எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகுவிபத்தில் எமைப் பிரிந்த-

**லெப். பாண்டி** ( - தர்மகுலசிங்கம் - திரியாய் திருகோணமலை)

**ஒஸ்நெஸ்** (மாரிமுத்து சிவராசா - சிவன்கோவிலடி திருகோணமலை)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் முகாமொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த-

⊛ **ரஞ்சித்** (சிவபாதம் சிறிகாந்தன் - மாஙருவி, ஒட்டிசுட்டான் -முல்லைத்தீவு)

வவுனியா - வேலன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். நேசன்** (செல்லத்துரை பரமநாதன் 5- ஆம் படிவம். பாவற்குளம் - வவுனியா)

1991ஆம் ஆண்டு கிளி- ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் மக்கன்ரோ** (சதாசிவம் புலேந்திரன்- கனகராயன்குளம் - வவுனியா)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி 02ஐச் சேர்ந்த தமிழிளைஞன். வியாபாரத்திற்கெனச் சென்று காணாமல் போன புதுநகர் வீச்சுக்கல்முனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

⊛ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-8439)

### சிந்தனைக்கு

தங்களால் முடியாததை முடியுமென்று எண்ணுவதே, பெரும்பாலோரிடம் உள்ள சங்கடம்.
— மர்கஸிம் கோர்க்கி.


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05


# பேரினவாதிகளின் நம்பிக்கை நட்சத்திரம்

பௌத்த - சிங்கள தீவிர அடிப்படைவாதிகளுக்கு ஒரு தலைமை கிடைத்துள்ளது. முன்னாள் சிறிலங்கா ஆட்சித் தலைவர்கள் யாராக இருப்பினும், பௌத்த-சிங்களப்பேரினவாத சிந்தனையையே கொண்டவர்களாக இருந்திருப்பினும், இன்றைய தலைவர் டி. பி. விஜேதுங்கா போன்று வெளிப்படையாகவே தம்மை அடையாளம் காட்டிக் கொண்டவர்களும், அதற்கேற்ப நடக்க முற்பட்டவர்களும் இல்லை என்றே கூறவேண்டும்.

''டி. பி, விஜேதுங்கா தீவிர அடிப்படைவாத பௌத்த-சிங்களவாதிகளுக்கு தலைமை தாங்க முற்படுகின்றார், தமது அரசியல் தளத்தை அதிலிருந்தே கட்டி எழுப்ப முற்படுகின்றார்'' இவ்வாறுஏற்கனவேஇப்பகுதியில்குறிப்பிட்டிருந்தமை கவனத்திற்குரியது. தற்பொழுது தனது குறிக்கோளில் கணிசமான வெற்றியை டி. பி. விஜேதுங்கா பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும்.

இதற்கு ஆதாரமாக தீவிர அடிப்படைவாத பௌத்த அமைப்புக்கள் டி. பி. விஜேதுங்காவை வெளிப்படையாக ஆதரிக்கவும், சில அவருடன் இணைந்து செயற்படவும் முற்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். இதற்கு காமினி ஜெயசூரியா போன்ற தீவிர பேரினவாதிகள் டி.பி. விஜேதுங்காவிற்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ளமையையும், பொது சன நிதாஸ் பெரமுனை, (பொது மக்கள் சுதந்திர முன்னணி) போன்ற அமைப்புக்கள் ஐ. தே. கவுடன் இணைவதற்கு முன்வந்தமையையும் சுட்டிக் காட்ட முடியும்.

கடந்த காலத்தில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் அனைவரும் பௌத்த - சிங்கள பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கினும், பௌத்த பேரினவாதிகள் இவர்கள் அரசியலில்ஆதாயம் தேடும் சந்தர்ப்பவாதிகள் என்ற நிலையிலேயே பார்த்தும், விமர்சித்தும் வந்தனர். இதற்கு இப்பேரினவாதத் தலைவர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்தவை எதையும் விட, தேர்தல் நோக்கில் 'தமிழ் தலைவர்'களுடன் வைத்திருந்த உறவே அவர்களுக்குச் சந்தேகமாக இருந்தது,

ஆனால், இன்று அவ்வாறான நிலையில் இருந்து டி. பி. விஜேதுங்கா கணிசமான அளவில், ஏன் முழுமையாகவென்றே கொள்ளக் கூடிய அளவிற்கு மாற்றியுள்ளார், தமிழ் தரப்பினர் ஒட்டு மொத்தமாகவே அவரால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் வெற்றிக்காகக்கூட அதைத் துரும்பாக வைத்திருக்க அவர்

# தேர்தல்களில் ஐ. தே. க. வெற்றிபெற இ. தொ. காவே உதவி வந்தது

**- றிச்சர்ட் பத்திரான**

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இது காலவரையிலான தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு காரணமாக இருந்தவர் இ. தொ. கா. தலைவர் தொண்டமானேயாவார். இவ்வாறு சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற கொறடாவான றிச்சர்ட் பத்திரான கூறியுள்ளார்.

அம்பலாங்கொடை நகரில் நடைபெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; தொண்டமான் இன்று அரசாங்கத்துடன் அதிருப்தி அடைந்துள்ளார். அவரது ஆதரவு எமக்குக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. மலையகத்தின் வாக்குகள் அனைத்தும் எமக்குக் கிடைத்தால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் அதற்காகப் பயந்து சில பௌத்த பிக்குமார் தொண்டமானை ஒரு கட்சியினரும் ஏற்கக் கூடாதென பெரிய இனப்பற்றுடன் பேசுகின்றனர். காமினி ஜயசூரியாவும் பயப்படுகிறார். தொண்டமான் கடந்த பதினேழு ஆண்டு காலமாக ஐ. தே. க. வுடன் இருந்தவர். எவருமே அப்போது அவருக்கு எதிராக வாய் திறந்து பேசியது இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் எவ்வளவுதான் பணத்தை செலவிட்டாலும் வன்செயல்களில் ஈடுபட்டாலும் தென்மாகாண தேர்தலில் நாம் வெற்றிபெறுவது உறுதி இப்பகுதிகளில் தேர்தல் வேலையை கவனிக்க ஐ. தே. கவினால் நியமிக்கப்பட்டுள்ள அநுரா பண்டாரநாயக்காவிற்கு நாம் சிறந்த பாடங்களை இத் தேர்தல் மூலம் புகட்டுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## கிளி விவசாய பீடத்தில் புறநிலைக் கற்கை நெறி

புறநிலைக் கற்கை நெறி ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வேண்டுதலின் பேரில் கிளிநொச்சி விவசாயபீடத்தில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி முதல் இடம் பெற்று வந்தது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பும் பொருளாதாரத்தில் வளங்களை இனங்காணலும் திட்டமிடலும் என்ற பொதுவான தலைப்பில் பல்வேறுபட்ட சிறு தலைப்புகளைக் கொண்ட 55 மணித்தியால விரிவுரைகள் பல்வேறுபட்ட துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

## சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது

(வடமராட்சி)

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் வகுப்பறைக் கொட்டகை சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது. வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட நூறு அடிகொண்ட வகுப்பறை கொட்டகையே மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்களினால் சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது. (யோ)

## உருளைக்கிழங்குப் பயிரில் சிற்றுண்ணியின் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் உருளைக் கிழங்குச் செய்கையில் தற்பொழுது சிற்றுண்ணியின் தாக்கமும், பிறகூற்று வெளிறல் நோயின் தாக்கமும், தற்பொழுது பரவலாக ஆரம்பித்துள்ளது. சிற்றுண்ணியின் தாக்கம் கடந்த இரண்டு மூன்று நாள்களிலேயே ஆரம்பித்துள்ளது அத்துடன் இப்போதுள்ள காலநிலை இத்தாக்கங்கள் அதிகரித்தலை ஊக்குவிக்கும் எனவும்தெரிவிக்கப்படுகிறது. விவசாயிகள் மேற்கூறியதாக்கங்களுக்குஉரிய பீடைநாசினிகளை விசிறி உடனடியாகக் கட்டுப்படுத்தாவிடின் விரைவில் பாதிப்பு ஏற்படும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று உதவி விவசாயப் பணிப்பாளரின் (விரிவாக்கம்) பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## பாலர் பாடசாலை திறப்பு விழா

ஞானக் குழந்தை இல்லத்தின் இலவச பாலர் பாடசாலைதிறப்பு விழா எதிர்வரும் வியாழனன்று காலை பத்து மணியளவில் பாலர் கல்விக் கழகத் தலைவர் ஆ. செல்லையா தலைமையில் 179 பிறவுண் வீதியில் நடைபெறவுள்ளது. இவ் விழாவின் பிரதம விருந்தினராக தொழிலதிபர் கலாநிதி க. கனகராசா கலந்து கொள்ளவுள்ளார்.

# உவர்தரை மீட்பு நெற்செய்கை அறுவடை

கோப்பாயில் உள்ள உவர் நிலத்தில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் செழிப்பாக வளர்ந்து அறுவடைக்குத் தயாராக உள்ளது.

மேற்படிநிலத்தில்இன்றுதிங்கட்கிழமை காலை 10 மணிக்கு அறுவடை விழா நடைபெறவுள்ளது.

மேற்படி திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதாலது எதிர்காலத்தில் 800 ஏக்கரில் பரந்திருக்கும் இவ் உவர் நிலம் பயன்பாட்டிற்குட்படுத்தப்படுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## எருமை வளர்ப்பை ஊக்குவிக்க நடவடிக்கை

கிளிநொச்சிக் கோட்டத்திலுள்ள கல்மடுநகர், புதுமுறிப்பு ஆகிய கிராமங்களில் எருமை வளர்ப்புத் திட்டமொன்று முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும்இத்திட்டத்தில்ஆரம்பகட்டமாக மேற்படி கிராமங்களைச் சேர்ந்த சுமார் 10பயனாளிகளுக்கு எருமை வீதம் 20 எருமைகள் வழங்கப்பட்டுள்ளன.

உழவு, பாற்பொருள் உற்பத்தி போன்ற தேவைகளை நிவர்த்தி செய்வதற்கானஒரு முன்னோடி நடவடிக்கையாகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## போர்க்காலக் கண்காட்சி

(தொல்புரம்)

சிறிலங்கா இனவாத அரசின் ஆயுதப்படைகள் தமிழீழ மண்ணில் நடாத்தி வரும் அட்டூழியங்கள், உயிர்ப்பலிகள், இனவெறி அட்டகாசங்கள் போன்ற பல்வேறு கொடுமைகளையும், எமது மக்கள் எழுப்பும் அவலக் குரலையும் சித்திரிக்கும் போர்க்காலக் கண்காட்சிகள் சங்கானை, சண்டிலிப்பாய் வட்ட பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்படுகின்றன.

அண்மையில் சங்கானை பொதுச்சந்தை சதுக்கத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவாலய முன்றலில் ஆரம்பமான போர்க்கால சித்திரக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள், இளைஞர்கள், அப்பாவிப் பொதுமக்கள் போன்றோர் எமது மண்ணில் சிறிலங்கா அரசபடைகளால் அழிக்கப்படுவதையும், கொடூரமான சித்திரவதைகளையும், சித்திரிக்கும் பெரிய அளவிலான ஓவியங்கள் மக்கள் பார்வைக்காக கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. பெரும் திரளான மக்கள் இக் கண்காட்சியினை பார்வையிட்டு வருகின்றனர். மக்கள் வெள்ளம் அலை அலையாக திரண்டு வருவதால் வீதி ஒழுங்குகளை சங்கானை காவல் துறையினர் கண்காணித்து வருகின்றனர். (14)

# வீரப்பன் குழு விரைவில் கைது செய்யப்பட்டு விடலாம்

**-வால்டர் தேவாரம் தெரிவிப்பு**

(சென்னை)

சந்தன மரக் கடத்தல்காரர் வீரப்பன் குழுவினருக்கான உணவு விநியோகப் பாதை தடைப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் அக் குழுவினர் எந்த நேரத்திலும் கைது

எவரும் இதுவரை உயிருடன் கைது செய்யப்படவில்லை எனவும் அக் குழுவினருடன் பொலிசார் தொடர்ந்து நடாத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து அவர்களின் எண்ணிக்கைவெகுவாகக்குறைந்து

# ஜம்முவில் சர்வஜன வாக்கெடுப்பு இந்தியாவிடம் பாக். வலியுறுத்து!

(இஸ்லாமாபாத்)

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வழிவகுக்கப்பட வேண்டுமென்று பாகிஸ்தான் இந்தியாவிடம் தெரிவித்துள்

காஷ்மீர் பிரச்சினையைச் சமாதானமாக தீர்க்கக் கூடிய உகந்த நிலையை இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் உருவாக்குவதற்கான தெளிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் கோரியுள்ளது.

### காஷ்மீர் பிரச்சினையில்

யுள்ளார், தமிழ் தரப்பினர் ஒட்டு மொத்தமாகவே அவரால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் வெற்றிக்காகக்கூட அதைத் துரும்பாக வைத்திருக்க அவர் விரும்பவில்லை என்றே கூறலாம். அதற்கு மாறாக பௌத்த - சிங்களப் பேரினவாதத்திற்கு மீண்டும் புத்தூக்கம் அளித்து, அதன் மூலம் வாக்குகளைப்பெற்று தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்தலாம் என எண்ணுகின்றார்.

இதனை வெளிப்படுத்தும் நடவடிக்கையாகவே முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா போன்றோர் கடைப்பிடித்த தமிழர் தேசிய இனப் போராட்டத்திற்கு எதிராக ஒத்துழைக்கக் கூடிய தமிழ்க் குழுக்களை அரவணைக்கும் போக்கையும் பெருமளவில் கைவிட்டார். கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் பேச்சுக்கள் எதையும் டி. பி. பெரிதாகப் பொருட்படுத்தாமல் அவர்களை 'திரிசங்கு சொர்க்க' நிலைக்குத் தள்ளினார்.

இதேபோன்றே, 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் இருந்து அதன்பின் இடம் பெற்ற சகல தேர்தலிலும் ஐ. தே. கவின் வெற்றிக்குக் காரணமாக இருந்த அமைச்சர் தொண்டமானையும், இ. தொ. காவையும் உதறித் தள்ளத் தயாரானார். இதேவேளை அக்கட்சியில் பிரிவினையையும் உண்டு பண்ணியுள்ளார், டி பி. விஜேதுங்காவின் இம்முடிவானது சிறிலங்காவின் பலம் பெற்ற ஜனாதிபதியாகக் கருதப்பட்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனாவோ, அன்றி பிரேமதாசாவோ செய்யமுன்வராத ஒரு செய்கையாகும். ஆனால், டி. பி. விஜேதுங்கா அதனைச் செய்துள்ளார், அதன் மூலம், தற்பொழுது தீவிர பௌத்த - சிங்கள அடிப்படைவாதிகளிடம் நம்பிக்கையும் பெற்றுள்ளார்.

இதுமாத்திரம் டி. பி. விஜேதுங்கா செய்யவில்லை. அரசியலில் பௌத்த - சிங்கள உயர் குழாத்தை மீண்டும் அணிதிரட்டுவதிலும் தீவிர அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். அனுராபண்டாரநாயக்காவை ஐ. தே. கவில் இணைத்ததும், காமினி திசாநாயக்காவை இணைக்க முற்படுவதும் இதன் வெளிப்பாடு என்றே கொள்ள முடியும். அதாவது, கண்டிய பௌத்த சிங்கள உயர் குழாத்தை மையமாகக் கொண்ட ஓர் ஆட்சியை நிறுவவே டி. பி. விஜேதுங்கா முற்படுவது வெளிப்படையாகவே தெரிகின்றது.

ஆனால், டி. பி. விஜேதுங்காவின் பௌத்த - சிங்களவரின் இரட்சகர் என்ற நிலைப்பாடு இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்க்கவோ, சமாதானம் உருவாகவோ உதவப் போவதில்லை. மாறாக வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல, இலங்கையில் ஏனைய பகுதிகளிலும் பிரச்சினைகளும், போராட்டங்களும் உருவாகவே வழிவகுக்கும். இதனை, தமது இனவாதப் போக்கால் இலங்கை எவ்வளவு துன்பங்களை அனுபவிக்க வேண்டி வந்தது என்பதை தற்பொழுது உயிரோடு இருந்து அனுபவித்துவரும் முன்னாள் சிங்கள ஆட்சியாளர்களிடம் கேட்டு அறிந்து கொள்வது டி. பி. விஜேதுங்காவிற்கு உபயோகமாக இருக்கும்.

பாதை தடைப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் அக் குழுவினர் எந்த நேரத்திலும் கைது செய்யப்பட்டுவிடலாம் எனவும் தமிழக காவல் துறை கூடுதல் ஆணையாளர் டபிள்யூ. ஐ. தேவாரம் கூறியுள்ளார்.

கரூர் அருகே பசுபதிபாளையம் கிராமத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், வீரப்பன் குழுவைச் சேர்ந்த நடராஜ் தொடர்ந்து அவர்களின் எண்ணிக்கைவெகுவாகக்குறைந்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு மற்றும் மலைப் பகுதியில் ஐந்நூறுக்கும் அதிகமான பொலிஸ் படையினர் வீரப்பன் கும்பலைத் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், விரைவில் அவர்கள் கைது செய்யப்பட்டுவிடலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்காசிய சமாதான

# உடன்பாடு செயலாகுவதில் ஓரளவுக்கு முன்னேற்றம்

## அரபாத்- பெரஸ் கூட்டாக அறிவிப்பு

(ஒஸ்லோ)

பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தும் இஸ்ரேலியவெளியுறவு அமைச்சர் சிமொன் பெரசும் ஒஸ்லோ நகரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

மேற்காசிய சமாதான உடன்பாட்டை செயலாக்குவது தொடர்பாக ஏற்பட்டிருந்த தேக்க நிலையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக இருவரும் பின்னர் கூட்டாக தெரிவித்தனர். இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற போது அமெரிக்க வெளியுறவு செயலாளர் வாறன் கிறிஸ்தோபரும் உடன் இருந்தார்.

காஸாவிலும் ஜெரிக்கோ நகரத்திலும் பாலத்தீன சுயாட்சிக்கான உடன்பாடுகுறித்து இஸ்ரேலையும் பாலத்தீன விடுதலை இயக்கத்தையும் நெருங்கி வரச்செய்வதில் தீவிரமாக உழைத்த நோர்வே நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜான் ஹாஸ்டின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்தபோதே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# பொஸ்னியா குறித்து மீள் பரிசீலனை செய்க

## பிரான்ஸ் கோரிக்கை

(பாரிஸ்)

பொஸ்னியாப் போர் தொடர்பான அணுகுமுறையில் மாற்றம் செய்யவேண்டும்என்பதற்காக ஐரோப்பிய சமூகநாடுகளும் அமெரிக்கா, ரஷ்யா என்பனவும் சந்தித்துப் பேச்சு நடத்த வேண்டும் என்று பிரான்ஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் தோல்வி அடைந்து விட்டதால் புதிய முயற்சிகள் தேவை எனவும், குளிர் காலம் முடிந்து விட்டால் பொஸ்னியாவிலிருந்து தமது நாட்டு துருப்புகள் மீளப் பெறப்படலாம் எனவும் குறிப்பாக தெரிவித்தார்.

நடத்த வழிவகுக்கப்பட வேண்டுமென்று பாகிஸ்தான் இந்தியாவுக்கு தெரிவித்துள்ளது. அத்துடன் இந்தியாவின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரச்சினைக்குரிய காஷ்மீர் பகுதியின் அரசியல் சூழ்நிலையை முன்னேற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளது

இஸ்லாமாபாத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க அறிக்கையொன்றில் மேலும் ஜம்முகாஷ்மீர் மக்களின் அபிலாசைகளை உறுதிசெய்யும் வகையில் இறுதி முடிவுகளை எடுக்கும் நோக்கமுடையதாக எதிர்கால இருதரப்பு பேச்சுக்கள் அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஜம்மு

காஷ்மீர் பிரச்சினையில்

# இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா செயற்படுகிறது

## அத்வானி கண்டனம்

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன், குலாம் நபி பாய் என்பவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கருத்துகளுக்கு பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிக்க வேண்டும் எனக் கோரிவரும் பாகிஸ்தான் ஆதரவு கோஷ்டிக்கு தலைவராக இருக்கும் குலாம் நபி பாய் கடந்த செப்டம்பரில் அமெரிக்க அதிபர் ஐ. நா. சபையில் ஆற்றிய உரையைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதற்குபதிலளித்து எழுதிய கடிதத்தில் கிளிண்டன் காஷ்மீரில் அமைதி ஏற்படுவதற்கு உங்களுடன் ஒத்துழைக்கத் தயார் எனக் குறிப்பிட்டிருந்தார்.

கிளிண்டனின் இந்த நடவடிக்கையை காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுக்கு எதிராக அமெரிக்காவின் புதிய நடவடிக்கை என்று அத்வானி வர்ணித்துள்ளார். இது தொடர்பாக புதுடில்லியில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய அத்வானி மேலும் குறிப்பிடுகையில், இந்தியாவுக்கு எதிரான மறைமுக யுத்தத்தை நிறுத்த சம்மதித்தால் மட்டுமே பாகிஸ்தானுடன் இந்தியா அடுத்த கட்ட பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் எனவும், காஷ்மீர் பிரச்சினை பற்றி இந்தியா பாகிஸ்தானுடன் மட்டுமே பேசவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# மாநில அரசு அறிக்கை பெற ஆளுநருக்கு அதிகாரமுண்டு

## -- டாக்டர் எம். சென்னாரெட்டி

மாநில அரசிடம் அறிக்கை கோருவதற்கு மாநில ஆளுநருக்கு சட்டபூர்வ அதிகாரம் இருக்கிறது என்று தமிழக ஆளுநர் டாக்டர் எம் சென்னாரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் இருக்கும் அவரது இல்லத்தில் எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தை கொண்டாடிய அவர் அங்கு மேலும் கூறுகையில், ஆளுநருககு அறிக்கை அளிக்க வேண்டியது மாநில அரசின் கடமையாகும் என்றும் தெரிவித்தார். இந்த வைபவத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங் ஆந்திர முதல்வர் விஜயபாஸ்கர ரெட்டி. புதுவை முதல்வர் வி. வைத்தியலிங்கம், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.கவுடன் சுமுகஉறவு

## அத்வானி அறிவிப்பு

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தமது கட்சி சுமுகமான உறவுகளைப் பராமரித்து வருகிறது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம் நாடாளுமன்றத்தால் கொள்கை ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது எனவும், டங்கல் யோசனைகளை ஏற்றுக் கொள்வதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

# தொழிலாளர் கற்கை நெறியில் தமிழ் ஒரு பாடமாக வேண்டும்

## பேராசிரியர் சண்முகதாஸ் கோரிக்கை

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கற்கை நெறிக்கு தமிழ்மொழி ஒரு பாடமாக இல்லாதிருப்பது வேதனை தரும் ஒரு விடயமாகவுள்ளது. இப்பாடத்தை இக்கற்கை நெறியில் இடம் பெறச் செய்வதில் பல்கலைக் கழகம் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும் என யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்விக் கழகத்தின் துலங்கல் 3 சஞ்சிகை வெளியீட்டு விழா நேற்று முன்தினம் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து ஆய்வுரை நடாத்துகையில் இச்சஞ்சிகையில் உள்ள கட்டுரைகள் யாவும் மிகவும் தரமானவையாகவுள்ளது. சாதாரண மாணவர் தரத்தில் இருந்து தொழிலாளர் கற்கை நெறியைப் பயின்றுள்ள மாணவர்களால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் தரமானவையாகவுள்ளன என்றார்.

தொழிலாளர் கல்விக் கழகத் தலைவர் திரு. வே, சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொழிலாளர் கல்விக்கழக உப தலைவர் செல்வி சி. சிவதர்சினி வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா மங்கள விளக்கேற்றியதுடன் ஆசியுரையையும் நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, யாழ். பல்கலைக் கழக கல்வியற்றுறை தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம், யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துக்களையும், தமிழீழ கல்விமேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன், யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல், வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. செல்லையா உருத்திரா ஆகியோர் சிறப்புரைகளும், யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி த. தணிகைச் செல்வி, யாழ். தொழில் நுட்பக்கல்லூரி, அதிபர் திரு. க. ஜெயரட்ணம், யாழ். மாவட்ட வெகுஜன அமைப்பு ஒன்றியத் தலைவர் திரு. சொ. சூ. சிறில் ஆகியோர் கௌரவ விருந்தினர் உரைகளையும் நிகழ்த்தினார்கள்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை தொழிலாளர்கல்வித் திட்ட இணைப்பாளர் திரு. க. சின்னத்தம்பியும், ஆய்வுரையை யாழ்பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் நிகழ்த்தினார்கள்

சஞ்சிகையின் முதல் பிரதியை திரு. எஸ். சிவநேசன் அவர்களும் சிறப்புப் பிரதிகளை என். சந்திரமோகன், இ. தர்மராசா, க. பரராசசேகரம், எஸ். டொமினிக் எஸ். தவரட்ணம், இ. ஜனகன், கி. கிறிஸ்தோபர் ஆகியோர் பெற்றார்கள்.

கலை நிகழ்ச்சியாக விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக ஆதரவில் உருவான அழியாத செல்வங்கள் எனும் சமூக நாடகமும் இடம்பெற்றது. (17)

# கோட்டக்கல்வி அலுவலக பண ஒதுக்கீட்டை அனுப்புக

(நல்லூர்)

புதிதாக யாழ். மாவட்டத்தில் இயங்க ஆரம்பித்துள்ள பதினான்கு கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு உரிய பண ஒதுக்கீடுகளை உடன் அனுப்பி வைக்குமாறும் கோரும் கடிதம் ஒன்று மத்திய கல்வி அமைச்சிலிருந்து யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அத்துடன் வலயம் 1, 2 ஆகியவற்றில் கடமையாற்றும் கல்விப் பணிப்பாளர்கள் தமது சம்பளத்தை அண்மையிலுள்ள கல்விக் கோட்ட அதிகாரிகளிடமிருந்து பெறக் கூடிய வகையில் அவர்களுடைய சம்பளத்தை மாற்றுமாறும் இக்கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் யாழ். கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பகுதியில் கடமையாற்றும் ... பெற்றுச் செல்லுமாறு யாழ் கல்வித் திணைக்கள கணக்காளர் திரு இ. சுகுணதிரன் கோரியுள்ளார் எனவும் கல்வித் திணைக்கள செய்திகள் தெரிவிக்கின்றன. (17, 16)

## முதன்மை ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம் வலயம் 2 ஐச் சேர்ந்த கணித, விஞ்ஞான முதன்மை ஆசிரியர்களிற்கான செயலமர்வு நாளை மறுதினம் புதன்கிழமை 8. 30 - 4. 30 வரைவலயம் 2 காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் தவறாது சமுகந்தரும்படி கேட்கப்படுகின்றனர்.

## இலங்கைத் தூதராக திலகரட்ண

இலங்கை வெளியுறவுச் செயலர் பேர்னாட் திலகரட்ண மீண்டும் இந்தியாவில் இலங்கைக்கான தூதுவராக பதவி ஏற்பார்.

## நெருப்புக் காய்ச்சல் சிறுமி மரணம்

(வடமராட்சி)

நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பதினொரு வயது சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

நாகர் கோயில் வடக்கைச் சேர்ந்த யோசெப்யோன்சன் றசனிக்கா என்பவரே இந் நோக்ய்குஇலக்காகி இறந்தவராவார். (யோ)

## பயிற்சி வகுப்புகள்

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் தொல்புரம் பாபு கல்வி வளர்ச்சிக் கழகத்தில் ஆண்டு 5 மாணவர்க்கான புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மேற்படி இலவச பயிற்சி வகுப்புகளில் கணிதம், தமிழ் பாடங்கள் சிறந்த முறையில் பயிற்சியுடன் கூடிய கல்வி வசதிகளுடன் போதிக்கப்படுகிறது. மேலும் ஆண்டு 1 முதல் ஆண்டு 12 வரையிலான மாணவர்க்கு பகல் நேர இலவசக் கல்வியும், இரவு வேளைகளில் பெற்றோமாக்ஸ் வெளிச்ச வசதியுடன் மீட்டல் வகுப்புகளும் (சுயகல்வி) நடத்தப்படுகின்றன. இவ் இலவச கல்விச் சேவையினால் பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பயனடைய வாய்ப்பு எட்டியுள்ளது. (41)

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள 2-வது வலயத்தினர் சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்தஅதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்றை 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை யா/வட்டு. இந்துக் கல்லூரியில் சங்கானைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடாத்தவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்களும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களும் ஆரம்ப உரை நிகழ்த்துவார்கள்.

யாழ். லயன்ஸ் கழகத்தால்

# கண் சத்திரசிகிச்சை கருவிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தினால் யாழ். போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை வைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலை ஆகியவற்றிற்குக் கண்சத்திரசிகிச்சைக் கருவி தலா ஒவ்வொன்றுஅன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கையளிப்பு வைப ... நிதி பி. இரட்ணசபாபதி அவர்களும் யாழ். போதனா வைத்தியசாலைக்கான கருவியை யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் எஸ். ரவிராஜ் அவர்களும் லயன்ஸ் கழக பிராந்திய தலைவரிடம் இருந்து பெற்றுக்கொண்டனர்.

இந் நிகழ்வில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ...

# ஜேர்மனியில் கொல்லப்பட்ட மாணவியின் மரணத்தில் சந்தேகம்

## லண்டன் பத்திரிகை எழுப்புகிறது

(லண்டன்)

ஜேர்மனியில் பாடசாலைக்குச் சென்ற 14 வயது தமிழ்ச் சிறுமி சுஜீ, இவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்பது பழைய செய்தி. நாஜிகள் மீதும் அரசியல் குழுக்கள் மீதும் பழியைப் போட்டு வதந்திகள் பரவின.

ஆனால்அண்மையில் கிடைத்த சில தகவல்கள் சந்தேகத்தை எழுப்புவனவாகவுள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் ஈழகேசரி செய்தி வெளியிட்டுள்ளது.

சுஜீ தான் கடத்தப்பட்ட தினத்தன்றுபாடசாலைக்குச் செல்லவில்லையாம். அப்படியானால் பாடசாலைக்குச் செல்லும்போது கடத்தப்பட்டார் என்பது வெறும் கட்டுக் கதையா?

நீச்சல் பயிற்சிக்கு சென்றிருந்தபோது சுஜீ தன்னுடலில் இருந்த அடி தழும்புகளைக் காட்டி பள்ளித்தோழிகளிடம் அழுதார் என்பது உண்மையா?

சுஜீ! தமிழ் இளைஞர் ஒருவரை விரும்பினார் என்பதும் ஆனால் அதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது என்பதிலும் உண்மை உண்டா?

சுஜீயின் சடலம் எரிக்கப்பட்ட இடத்தில்கொள்ளிகுடம் உடைக்கப்பட்ட தடயங்கள் இருந்தனவாம். அப்படியானால் இந்து முறைப்படி சுஜீ எரிக்கப்பட்டுள்ளாரா?

இவற்றிற்கு விடைதேடி ஜேர்மன் பொலிசார் அலைவதாக மேற்படி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## மிதிவெடியில் கால் சிதறியது

சுழிபுரம் சவுக்கடி புளியந்துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடுவதற்காகச்சென்ற மீனவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் கடற்கரையோரமாக நடந்துசெல்கையில் மிதிவெடியில் சிக்குண்டதனால் வலது கால்பாதம் சிதறிய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இப்பரிதாபகரமான சம்பவத்தில் சுழிபுரம் மேற்கு இறாத்தலடியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முருகேசு இராசரத்தினம் (வயது 43) என்பவரே மிதிவெடியில் சிக்குண்டவரவார். (41)

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று மாலை 3.00 மணிக்கு மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

விசேட அறிவித்தல்

1-2-94 தொடக்கம் முதன்மை ஆசிரியர்கள், அதிபர்கள், தொலைக்கல்வி போதனாசிரியர்கள் ஆகியோர் தனியார் கல்வி நிறுவனங்களிலோ பிரத்தியேக வகுப்புக்களிலோ கற்பிக்க மாட்டார்கள் என்பதை அறியத்தருகிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

(சி-8447)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

23-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 377

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3726, 26-7603, 26-0711, 26-3410, 41-9480 27-2056, 24-9549, 27-4920, 27-8754, 24-0415 24-6972, 27-2107, 27-9489, 27-8155, 24-3258 43-6974, 26-8878, 26-3654.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

22-6897, 26-4882, 24-9490, 26-1098, 28-9633 26-4885, 24-6489, 27-8125, 22-4895, 42-1059 28-3233.

## மரண அறிவித்தல்கள்

### சி. த. சோமசுந்தரம்


முன்னாள் காலி பிரபல வர்த்தகர்

தலைகாட்டியை பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு வேலணை 6-ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சி. த. சோமசுந்தரம் 23. 1. 94 அன்று இரவு 9 மணிக்கு சிவபதமடைந்துவிட்டார். இவர் காலம் சென்றவர்களான தம்பிப்பிள்ளை, பார்பதிப்பிள்ளை தம்பதியினரின் கனிஸ்ட புத்திரனும், மனோன்மணி (அன்னம்மா) யின் அன்புக்கணவரும் பாலசரஸ்வதி, சொர்ணகாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ம. க. நல்லையா, ச. செல்வராசா (கிருஸ்ணா ஸ்ரோர்ஸ் பங்காளர், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற காலி பிரபல வர்த்தகர்களான சி. த. அருளம்பலம், சி. த. கனகசபை, சி. த. சுப்பிரமணியம், ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம்சென்றவர்களான மயில்வாகனம், மாணிக்கம் ...

பகுதியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை தமக்கு விரும்பிய கல்விக் கோட்டங்களுக்கு இடமாற்றம்

பதவி ஏற்பார். வெளிநாட்டு அமைச்சகம் நேற்று கொழும்பில் இத் தகவலை வெளியிட்டது.

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
16-01-1972

வீரச்சாவு
18-01-1989

## வீரவேங்கை மாதவன்

(கனகசிங்கம் இராகுலசிங்கம்)

திதி: 24.01.94

ஆண்டொரு ஐந்து அதற்குள் உதிர்ந்ததா?
மண்ணில் உன் நினைவொடு வாழும் நாமின்று
விண்ணில் உள்ள உன்தனுக்கு விருந்து
படைக்கிறோம்
மீண்டும் நீ வாராயோ என்றே ஏங்குகின்றோம்.

அன்னாரின் பிறந்த நாளை நினைவுகூரும் இந் நாளிலும் இன்று நடைபெறும் திவசக்கிரியையிலும் மதியபோசனத்திலும் சகபோராளிகளையும்உற்றார், உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

46, பேரம்பலம் வீதி,
பெரியமாவடி, - குடும்பத்தினர்.
சங்கத்தானை, சாவகச்சேரி. (7313)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

மேற்படி கையளிப்பு வைபவம் யாழ். லயன்ஸ் கழகக் காரியாலயத்தில் நேற்று மாலை4 மணிக்குபிராந்தியத் தலைவர் லயன்ஸ் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பருத்தித்துறை வைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கான கண் சத்திர சிகிச்சைக் கருவியை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாசன் அவர்கள் கலந்து கொண்டு கண் சத்திர சிகிச்சைக் கருவி பற்றி சிறு விரிவுரை ஒன்றை ஆற்றினார். இந் நிகழ்வில் மேலும் பல வைத்தியர்கள் அறிஞர்கள் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்- (பா)

## கணித விளையாட்டு உபகரண போட்டி

(யாழ்ப்பாணம்)

முதன்மை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் மட்டத்தில் கணித விளையாட்டுக்களிற்கான போட்டியொன்று யாழ், மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்டு 11வரையான கணித பாடஎண்ணக்கருக்களைப் பிரதிபலிக்கும் கணித விளையாட்டுக்களை வடிவமைத்து மார்ச்முதலாம் திகதிக்கு முன்பாக யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலைய கோப்பாய் மகாவித்தியாலயம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வேதநாயகம் கேட்டுள்ளார்.

## மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு சென்ற சனிக்கிழமை முதல் மண்ணெண்ணெய்விநியோகிக்கப்பட்டுவருகின்றது.

மேற்படிமண்ணெண்ணெய் விநியோகம், நாளை செவ்வாய்க்கிழமை வரை நடைபெறுமென தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

### வாகன

நபர் டிசம்பர் 15-ம் திகதி இவ்வாகனத்தை உபயோகிக்க எடுத்தபோது இது 12 கிலோ மீற்றர்கள் மாத்திரமே ஓடியுள்ளது.

நூரளையில் இவ்வாகனத்தில் சென்ற சிலர் பயமுறுத்தப்பட்டார்களென்றுகுற்றஞ் சாட்டப்பட்டதையடுத்தே இந்த உயர் மட்டவிசாரணை நடைபெறுகிறது.

### சர்வாதிகாரம்

யில் முன்னர் காணப்பட்டது. போன்றே தற்போது சர்வாதிகாரப்போக்கு காணப்படுகிறது. எனவே இவ்வானான கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்படுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

ஜனாதிபதியின் பெயர் மட்டுமே மாறியுள்ளதே தவிர இருவரின் கொள்கையிலும் மாற்றம் எதுவுமில்லை. சிலரின் கைப் பொம்மையாக டி.பி. விஜேதுங்கா மாறிவிட்டார் என மேலும் அவர் தெரிவித்தார்'

### ஆரம்பத்தின்

அறிவித்தல் இன்றி அப்பாடசாலையில் மேலதிக ஆசிரியருக்கு சம்பளம் வழங்கினால் அச்சம்பளப் பணம் உரிய அதிபரின் சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் மேலதிக ஆசிரியர்கள் ஆசிரியர் பற்றாக்குறையான இடங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டுக் கழகம் மோதவுள்ளது.

### 2ஆவது ஆண்டில்

மாகின:

முன்னதாக மேற்படி நிகழ்வில் - வன்னி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. ஞானம் அவர்கள் ஈகைச்சுடரை ஏற்றிவைக்க மங்கள விளக்கினை கிளிநொச்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இலக்கியன் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் பலரும் சிறப்புரையாற்றினர்.

வன்னி மாவட்ட அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் திரு. ஞானம் அங்கு உரையாற்றும் போது,

எமது தேசிய விடுதலைப் போராட்டப் பாதையானது எல்லைகளை விடுவிப்பது மட்டுமல்ல. அது சமுதாயத்தை எதிர் நோக்கியிருக்கும் பல அடக்கு முறைகளை, தகர்த்தெறிந்து, தேசிய விடுதலையை முன்னெடுத்துச் செல்வதாகும்.

இவற்றிற்கு அமையத்தான் எமதுதேசியத்தலைவரினால், நன்கு வழி சமைக்கப்பட்டு, எமது விடுதலைப் போராட்டம் நகர்த்தப்படுகின்றது.

இராணுவ அழிவுகளினாலும் சமுதாயக் கொடுமைகளாலும் சிதைக்கப்பட்ட சித்திரங்களான இச்சிறுவர்கள் சமுதாயத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு குற்றுயிருடன் துடித்தவர்கள். அதனால் இவர்களை அப்படியே விட்டுவிட முடியாது. இவர்கள் ;எமது சகோதரர்கள். எங்கள் தமிழீழச் செல்வங்கள். இவர்களைப் பேணிப் பாதுகாத்து, இச் சமுதாய வழிகாட்டிகளாக உருவாக்க வேண்டும் என்று, எமது தேசியத்தலைவரின் திட்டமானது பல இடங்களிலும் செயல்பட்டுவருகிறது என்றார்.

சுப்பிரமணியம், ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம்சென்றவர்களான மயில்வாகனம், மாணிக்கம் மற்றும் இலட்சுமி, இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீரங்கன் (ஜேர்மனி). திருமதி சிவநாதன், ஸ்ரீலோசினி (கொழும்பு), ஸ்ரீரகு(ஜேர்மனி), ஸ்ரீராதா (கொழும்பு), ஸ்ரீநந்தன் (கொழும்பு), ஸ்ரீநிர்மலன், ஸ்ரீதீபா, ஸ்ரீமயன், யாழினி, மகிழினன், இரசனன், இரதீசனன், மாலினி ஆகியோரின் அன்புப்பேரனும் சௌதராமின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து 24. 1. 94 இன்று பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

15/6 சிறாம்பியடி ஒழுங்கை, தகவல்
ஸ்ரான்லி றோட், ம. க. நல்லையா (மருகன்)
யாழ்ப்பாணம். ப. கார்த்திகேசு (பெறாமகன்)

(7315)

## கனகசபை சிதம்பரநாதன்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

காரைநகரை பிறப்பிடமாக கொண்டவரும் கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய கனகசபை சிதம்பரநாதன் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகசபை ராசம்மா தம்பதிகளின் புதல்வனும், கமலாவதியின் அன்புக் கணவரும், மஞ்சுளா (நிர்மாணத் திணைக்களம்), திருக்குமார் (யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவன்), தயாளினி (2-ம் வருடம் யாழ். மருத்துவபீடம்), நிசாந்தன் (அலன் - மாவீரர்), தர்ஷனி (யா. வேம்படி மகளிர் கல்லூரி), கோகுலன் (யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராஜா, பாலசுப்பிரமணியம், நாகரெட்னம், ராஜேஸ்வரன், நவமணி, காலஞ்சென்ற கணேஸ், ஆனந்தராஜா, கருணாகரன், கோபாலன் ஆகியோரின் அன்புத் சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
95, ராஜபாதை, கோகுலன்.
திருநெல்வேலி கிழக்கு. (7316) (மகன்)